
கீற்று
SOUTH BAY TAMIL KALVI
தமிழால் இணைவோம், தமிழ்போல் வளர்வோம்!

# இணை ஆசிரியர் உரை

**வா**சக நெஞ்சங்களுக்கு,
பிரியமான வணக்கம்.

வசந்த மழையின் முதல் துளியின் மகிழ்ச்சியைப் போல் நமது கீற்று மின்னிதழின் முதல் பதிப்பினை வரவேற்று, வாசித்து மகிழ்ந்த உங்கள் அனைவருக்கும் எம் நன்றிகள்.

வாசிப்பு என்பது நீர் ஊறிய வாசலில் வரியோடும் காலடித் தடம் போல, உணர்வின் ஈரத்தில் எண்ணக் காலடிகளைப் பதித்துச் செல்லும்.

இவ்விதழின் ஒவ்வொரு படைப்பும் பல வித சொற்கள், அவை வெளிதரும் பல வித சிந்தனைகள் எனப் பல வேறு உணர்வுகளை தடம் பதித்துச் செல்கின்றது.

‘ஆழியின் அர்த்தங்கள்’ படைப்பில் ஆழப் புதைந்திருக்கும் வண்ண நினைவுகளும்,

‘பெண்மையின் மேம்பாடு’ பற்றிய கட்டுரையில் வெளிபடும் மானிடப் பொறுப்பும், ‘சிந்தனை துகள்களில்’ உள்ள நிதர்சன பார்வையும் என பலதரப்பட்ட உணர்வுகளின் ஒரு கூட்டுப் படைப்பே இவ்விதழ்.

உணர்வுகளின் ஒருங்கிணைப்பே படைப்பாளர்களுக்கும் வாசகர்களுக்கும் இடையேயான உறவு என்பதை பதிவு செய்து விடை பெறுகிறேன்.

மீண்டும் இணைவோம்.

நட்புடன்,
வாணி!

# துணை முதல்வர் உரை

## சிந்தனைத் துகள்கள்

"நீ ஒருவனுக்கு ஒரு விஷயத்தை அவனுக்குத் தெரிந்த மொழியில் கூறினால் அது அவனுடைய மூளைக்குச் செல்கிறது,அதேவிஷயத்தைஅவனுடையத்தாய்மொழியில் கூறினால் அது அவனின் உள்ளத்தை சென்றடைகிறது" - திரு நெல்சன் மண்டேலா

திரைகடல் ஓடி, திரவியம் தேடி, உலகெங்கும் பரவி கிடக்கும் தமிழ்ச் சொந்தங்கள் தமிழை ஏதோ ஒரு வழியில் வாழவைத்துக் கொண்டு இருக்கின்றனர்.
அப்படி குடிபெயர்ந்துவந்துஇங்கேவாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் சமூகத்தின் அடுத்த தலைமுறைக்குத் தமிழை கொண்டுச் செல்லும் பெரும் பணியில் நானும் ஒரு சிறு தொண்டு ஆற்றுவதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

என்னிடம் பல பேர் வைக்கும் ஒரு குற்றச்சாட்டு, பிள்ளைகளுக்கு தங்கள் தாய் மொழியான தமிழைக் கற்க நேரம் இல்லை என்பது தான். தாய் மொழியைக் கற்பதால் கிடைக்கும் நன்மைகளை அவர்கள் அறிந்தால் அவர்களின் எண்ணம் நிச்சயம் மாறி விடும்.

தமிழ் இனத்தின் கலாச்சாரம், பண்டிகைகள், பண்பாடு மற்றும் இலக்கியங்களைத் தெரிந்துக் கொள்வதோடு மட்டும் அல்லாமல் தமிழைக் கற்பதில் அறிவுப்பூர்வமான பல நன்மைகள் உள்ளன.

தாய் மொழி கற்பதின் முக்கியத்துவத்தைப் பற்றி டொரோண்டோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜிம் கும்மின்ஸ் என்பவர் ஒரு ஆய்வறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதில் பெற்றோர் தம் மக்களிடம் ஏன் தாய் மொழியில் பேச வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

அவரின் ஆய்வு தாய் மொழிக்கும், குழந்தையின் வளர்ச்சிக்கும் உள்ள சம்மந்தத்தை வெளிக்கொணர்கிறது. அவரின் ஆய்வில் 2 அல்லது 3 மொழிகள் கற்பதால் குழந்தைகளுக்கு வாக்கியங்கள் அமைப்பது மிக சுலபமாக வருவதோடு மொழிகளை கையாளும் திறன் மேன்படுவதை கண்டறிந்துள்ளார்.

ஒரே ஒரு மொழி கற்கும் பிள்ளைகள் தங்களது மனதில் உள்ள விஷயங்களைத் தெரிவிப்பதற்கும் உணர்த்துவதற்கும் ஒரே வழிமுறையை தான் பயன்படுத்துகின்றனர். 2 மொழி தெரிந்த பிள்ளைகள் அவர்கள் கற்கும் மொழிகளை, ஒரே ஒரு மொழி தெரிந்த பிள்ளைகளை விட ஆழமாகத் தெரிந்து கொள்கிறார்கள்.

2 மொழி பேசும் பிள்ளைகளிடம் உய்யச் சிந்தனை அதாவது 'க்ரிட்டிக்கல் திங்கிங்' திறன் மிகவும் உயர்ந்து காணப்படுகிறது. அது மட்டுமில்லாமல் தாய் மொழி தெரிந்த குழந்தைகள் வேறு ஒரு மொழியை மிகவும் சுலபமாக கற்கிறார்கள்.

தமிழ் இலக்கணத்தைக் கற்கும் பொழுது ஏற்படும் உள்ளுணர்வை குழந்தைகள் மற்ற மொழியின் இலக்கணத்தைக் கற்கும் பொழுதும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தாய் மொழி கற்பது ஒரு குழந்தையின் தனிப்பட்ட, சமூக மற்றும் கலாச்சார அடையாளத்தை உணர்த்துவதால் அவர்கள் தன்னம்பிக்கை உள்ளவர்களாக வளர்கிறார்கள். இதனால் அவர்கள் வாழ்வின் எல்லா விஷயங்களிலும், முக்கியமாக கல்வியில் சிறந்து விளங்குகிறார்கள்.

குழந்தைகள் தமிழ்க் கற்பதால் அவர்கள் நாளை தமிழின் பொக்கிஷங்களான திருக்குறள், கம்பராமாயணம், பொன்னியின் செல்வன் போன்ற நூல்களை படிக்க முடியும்.

தமிழை பிள்ளைகளுக்கு கற்பிக்க ஐந்து வழிகள் :

1. தமிழைக் கற்பதற்கான முதல் படி நாம் நம் குழந்தைகளோடு தமிழில் உரையாடுவதும் அவர்களை நம்முடன் தமிழில் பேச வைப்பதும் தான்.
2. குழந்தைகளுக்கு தமிழில் கதைகள் சொல்வதன் மூலம் நாம் அவர்களுக்கு நிறைய வார்த்தைகளை அறிமுகப் படுத்த முடியும்.
3. பிள்ளைகள் தமிழ்ப் புத்தகங்களை வாசிக்க வேண்டும். எனக்கு சிறு வயதில் தமிழின் மீது அதிக ஈடுபாடு வர காரணமாய் அமைந்தது சிறுவர் மலரும், கோகுலமும் தான்.
4. தமிழில் படங்கள் மற்றும் கேலிச்சித்திரங்கள் பார்ப்பதன் மூலம் குழந்தைகளுக்கு தமிழ் இன்னும் எளிதாகப் புரிகிறது.

5. குழந்தைகளுக்கு தமிழில் அவர்களது திறமையை வெளிப்படுத்த வாய்ப்பு அமைத்து தர வேண்டும். உதாரணமாக கவிதை எழுதுவது.நாடகத்தில் பங்கேற்பதன் மூலம் தமிழில் அவர்களது ஆளுமை வளர்கிறது.

5000 ஆண்டுகளுக்கு மேல் தமிழ் மொழி பேசப்பட்டு வருகிறது. இந்த பெருமை வெகு சில மொழிகளுக்கே உள்ளது. பல பழமையான மொழிகள் அழிந்தே போய்விட்டன. ஆனால் இன்றும் இளமை மாறாது புதிய தொழில்நுட்பத்துக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொண்டு வாழ்ந்து வருகிறது நம் தமிழ் மொழி. இப்படிப்பட்ட தொன்மையான மொழியை தாய் மொழியாகக் கொண்டதற்கு நாம் கர்வம் கொள்ள வேண்டும். தமிழை அடுத்தடுத்த சந்ததியர்க்கு கொண்டுச் செல்ல வேண்டும்.

தாய் மொழி கற்பதின் அவசியத்தை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். தமிழைக் கற்று தமிழ்போல் நம் பிள்ளைகள் வளர நான் மனதார வாழ்த்துகிறேன்.

**சங்கீதா கௌரிசங்கர்,**
**தென் விரிகுடா தமிழ்க் கல்வி.**

# இளவேனில்

இதமான இளவேனில் இன்பத்தின் நலவேனில்
இதயத்து மகிழ்வூற்றின் ஈடில்லாப் புதுவேனில்

பதமான சொல்போல பக்குவத்தின் பருவமிது
பாரினிலே மாற்றமெலாம் கொண்டாடும் காலமிது

விதவிதமாய்த் தெருவெங்கும் வேறுபட்ட நாடெங்கும்
விழாக்கோலம் பூணுகின்ற வசந்தத்தின் வண்ணமிது

எதன்மீதும் மனஞ்செல்லா தெல்லோரும் மயங்குகின்ற
என்னருமை இளவேனில் அணைத்துன்னை மகிழ்வேனே.

பகலவனின் சிரிப்பினிலே பனிவிலகும் இளஞ்சூட்டில்
பண்புற்றுச் சிலிர்க்கின்ற பளபளப்புத் தோற்றங்கள்

முகமெல்லாம் முத்தாகி முகிழ்க்கின்ற மலரினங்கள்
மூடுபனி முக்காட்டை வென்றுவிட்ட இலைவகைகள்

அகத்தினிலே ஆனந்தம் அலைவீசும் கடலென்றே
அன்றாடம் இயல்பாகி வாழுகின்ற மானுடர்கள்

தகதகக்கும் கோடைக்கே தாயாக இளவேனில்
தமிழ்நாட்டின் பருவங்கள் ஆறதிலே தனித்துவமே.

தென்றலெனுந் தேரேறித் திருவுலாவாம் இளவேனில்
தேன்மலர்கள் பூத்தெங்கும் பெருவிழாவாய்த் தோப்பெல்லாம்

அன்றலரும் காலையெல்லாம் அழகழகாய் மண்மீதில்
அங்கங்கே புதுப்புல்லின் ஆசைமிகு காதலிசை

சின்னதெனச் சிங்காரம் செவ்வானில் சிறகடிக்கச்
சிட்டுகளாய்ப் பறவையினம் சிரித்துலகைக் கலகலக்கக்

கன்னியிவள் இளவேனில் காற்றுடனே கால்பதித்தாள்
காதல்வரிச் சாயலைப்போல் கானல்வரிக் கவிபடைத்தாள்.

**வீரா பாலச்சந்திரன்,**
**திருச்சிராப்பள்ளி**

## #என்எண்ணச்சிதறல்கள் #என்எண்ணச்சுவடுகள்

படர்ந்திருக்கும் ஈரங்களில்
பதித்து வந்த பார்வைகள்...
சிதறி கிடக்கும் சுவடுகளில்
சேர்த்து விட்ட சிந்தனைகள்...
ஏற்பதும் இன்றி எறிவதும் இன்றி
செலவு இல்லா சில்லரைகள்
வாழ்வின் இனிமைகள்!!!

**வாணி**

## கடி ஜோக்:

1. வேடந்தாங்கல் பறவைகள் எங்கிருந்து வருகிறது?

முட்டையிலேர்ந்து

# இலக்கியச் சிந்தனை!

சிலேடைக்கவிஞர் காளமேகம்!

தமிழின் மொழி வளமையை அறிந்தவர்கள் தம்முடைய புலமையைக் காட்டவும், மொழிப் பற்றாளர்கள் படித்து இன்புறவும் இருபொருள் பட பாடுவது உண்டு. தமிழில் இப்படிப் பாடுவதற்கு சிலேடை என்று பெயர்.

காளமேகப்புலவர் இதுபோன்ற சிலேடை கவிதைகளைப் பாடுவதில் வல்லவர். இகழ்வது போல புகழ்வதும், புகழ்வது போல இகழ்வதுமான கவிதைகளை இயற்றுவதில் சிறந்தவர். இவர் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞராக கருதப்படுகிறார். சிறந்த சொல்லாற்றல் மிக்கவர். இவர் பாடியதாக 220 பாடல்கள் இன்றுவரை கிடைத்துள்ளன.

இவர் மோர் கொடுத்த இடைச்சிக்கு நகைச்சுவை ததும்ப பாடிய கவிதை இதோ!

காரென்று பேர்படைத்தாய் ககனத்து உறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நெடும் தரையில் வந்ததன் பின்
வார் ஒன்றும் மென்முலை யார் ஆய்ச்சியர்கை வந்ததன் பின்
மோர் என்றும் பேர் படைத்தார் முப்பேரும் பெற்றாயே

என வானில் இருக்கும் போது கார்(மேகம்) எனப் பெயர் பெற்றாய், மழையாக வந்து மண்ணில் விழுந்த பின் நீர் என்று பெயர் பெற்றாய். ஆய்ச்சியர் தயிர் கடைந்த பின், மோர் என மூன்று பெயர்

பெற்றுள்ளாய் எனப் பாடினார்.

அதாவது மோரிலே அதிக அளவு தண்ணீர் கலக்கப்பட்டு இருப்பதையே நகைச்சுவை ததும்பப் பாடியுள்ளார்.

மொழியின் சொல் வளத்தை முழுமையாக அறிந்து அதனை சுவைத்து இன்புறுவோம்.


**M.சித்ரா, எம்.ஏ, எம்.எட்,எம்.பில்.,**
**அங்கப்பா பதின்ம மேல்நிலைப் பள்ளி,**
**கோவை.**

# விடுகதை

1. தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான். அவன் யார்?
2. எங்க அக்கா சிவப்பு, குளித்தால் கருப்பு. அது என்ன?
3. காலையிலும் மாலையிலும் நெட்டை, மதியம் குட்டை. நான் யார்?
4. கந்தல் துணி கட்டியவன், முத்துப் பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தான். அது என்ன?
5. பிடுங்கலாம் ஆனால் நடமுடியாது. அது என்ன?

# நூலை அறிவோம்

## ஆயிஷாவும் நானும்




கோயம்பத்தூர் உக்கடத்தில் இருக்கும் ஒரு புத்தகக் கடையில் பழைய புத்தகங்களை எடைக்குப் போட்டு வரும் தொகையில் மிஞ்சிய 6 ரூபாயை சமன் செய்ய என் கையில் ஒரு புத்தகத்தை குடுத்தார் அந்த பாய் அண்ணன். அன்று எனக்கு தெரியாது என் வாழ்க்கையைப் புரட்டி போடப்போகும் புத்தகம் இது தான் என்று...

நெடுநாட்களுக்குப் பின் இரவு 2 மணி அளவில் என் கண்ணில் தென்பட்டப் புத்தகத்தைத் திருப்பியாவது பார்க்கலாமே என்ற எண்ணத்தில் எடுத்த புத்தகமே
“ஆயிஷா”...

ஒரு ஆசிரியனாய் என்னுள் எழுந்த பல மாற்றங்களுக்கு வித்திட்டது இப்புத்தகமே. ஆம், இது ஒரு புராணக் கதையோ, புரட்சிக் கதையோ அல்ல வெறும் 15 பக்கங்களுடன், அவளை போலவே மெல்லிய தேகத்தோடு இருக்கும் ஒரு புத்தகம்...
செக்கு மாட்டின் வேலையைத்தான் செய்துக் கொண்டிருக்கிறேன் என்று தெரிந்தும் அதை தவிர்க்க முடியாமல் குற்ற உணர்ச்சியுடன் இருக்கும் ஒரு ஆசிரியை எழுதும் கதை தான் இப்புத்தகம்.இதன் தலைப்பிலேயே “ஒரு விஞ்ஞான நூலுக்கு அதன் ஆசிரியை எழுதும் முன்னுரை” என்று எழுதப்பட்டிருக்கும்...

ஆம்,ஒரு ஆசிரியருக்கு இருக்கும் சலிப்புத் தன்மையை சுலபமாக நமக்கு புரியும் படியான எழுத்துக்களால் எழுதி, அவள் மீண்டெழ துடிக்கும் எண்ணத்தைப் பூர்த்தி செய்பவளாய்,ஒரு கதாநாயகியாய் காட்சியளிக்கிறாள் ஆயிஷா.

முதல் இரண்டு பக்கங்களில் மட்டுமே "ஆயிஷா" என்று எழுதி இருப்பார் ஆசிரியர், அதற்குப் பின் "என் ஆயிஷா" என்று எழுதி இருக்கும், ஏனென்றால் அவள் அவர்களாக மாறி வெகு நாட்களாயிற்று...

இக்கதையில் பகிரும் பெரும்பாலான விஷயங்களை நாமும் நமது பள்ளிக்காலத்தில் கடந்து வந்தமையால், படிக்கும் ஒவ்வொரு வரியும் நம் கற்பனையில் ஓடும் நிகழ்வுகளாய் மூளையில் ஒரு மூலையில் தேங்குகிறது...

“ இது ஒரு ஆசிரியை, மாணவிக்கு கற்றுத்தந்த கதையல்ல, அம்மாணவியிடம் கற்ற ஆசிரியையின் கதை”...
முதல் வகுப்பில் அவள் கேட்கும் காந்தவியல் கேள்வியில் ஆரம்பித்து, கடைசியாக குற்ற உணர்ச்சியைத் தூண்டி நம்மை நாமே அசிங்கப்படுத்திக் கொள்ளக்கூடிய கேள்வி வரை அனைத்தும் ஆயிஷா தனது அறிவின் ஆர்வத்தினால் கேட்ட கேள்விகளே... ஆனால் அக்கேள்விகள் கண்டிப்பாக நம்மை சுடும், ஆம் அவள் எரிந்து கொண்டே இருக்கிறாள், பிரகாசமாக!!...

ஆனால் அந்த கதகதப்பு பிடிக்காத பல ஆசிரியர்களின் பிரம்படிக்கும் ஆளானாள் ஆயிஷா ..
அவளொரு கேள்விகளின் ராட்சசி!!! இக்கதையைப் படித்து முடித்த பின்பும் என்னை எத்தனை கேள்விகளால் நித்திரையை இழக்க செய்திருக்கிறாள் அவள்...

ஒரு கட்டத்தில் அந்த ஆசிரியையை அவள் ‘அம்மா’ என்று குறிப்பிடும் தருணத்தில் அழுது கண்கள் புழுங்கி உனக்கு நான் என்ன செய்தேன், உன் கேள்விகளைக் கேட்பதை தவிர??? என்ற போது, மெய்சிலிர்த்து கண்கள் கலங்குவதை என்னால் உணர முடிந்தது...

இறுதியாக அவளுக்கு நடக்கும் அந்தக் கோர நிகழ்வுக்கு நானும் ஒரு காரணம் என்று படிக்கும் அனைவருக்கும் உறுத்தும் வகையில் அந்த பழியை நம் மீது சுமத்துகிறார் ஆசிரியர் நடராஜன்.

பள்ளிக்கூடங்கள் ,பலி கூடங்களாக ஆகிவிட்டன, அவரவர் அறிவைப் பயன்படுத்த அனுமதியுங்களேன் என்ற வார்த்தைகள் ஆறாக் காயங்களாய் இன்றும் .

என்னளவில் என்னை ஆசிரியர் பணியில் இருக்க வேண்டும் என்ற தீர்க்கமான தீர்மானத்தை எடுப்பதற்கு முதன்மை காரணமாக இருந்தது இந்த ஆயிஷா தான் ... என்னிடம் படிக்கும் பெரும்பாலான மாணவர்களுக்கு இப்புத்தகத்தை கொண்டு சேர்த்துள்ளேன், சேர்த்துக் கொண்டிருக்கிறேன்... நீங்களும் இதைக் கொண்டு சேர்ப்பீர்கள் என்ற நம்பிக்கையில், அவள் கேட்ட கடைசி கேள்வியுடன் இதை முடிக்கிறேன்...

மிஸ், கரோலின் எர்செல் போலவோ மேரி க்யூரி போலவோ நம்ம நாட்டுல பெயர் சொல்ற மாதிரி ஒரு பெண் கூட, விஞ்ஞானியா வர முடியலையே ஏன்???

வயதுக்கு வந்த நாளோடு பள்ளிக்கூடம் விட்டு ஓடியவர்கள், எங்கேயோ ஒரு ஊரில் யாரோ ஒருவனுக்கு துவைத்து, சமைத்து, பிள்ளைப் பெற்று போடுபவர்கள் , 30 ரூபாய் சம்பளத்திற்காக வீடு பெருக்கி சாணி மொழுகி , வயல் வேலைகள், கட்டடங்களுக்கு

கல்லுடைக்கும் பெண்கள், அவர்களில் எத்தனை ஆயிஷாக்கள் உள்ளனரோ.

தன் விஞ்ஞான கனவுகளை நாள்தோறும் அடுப்பு நெருப்பில் போட்டு சாம்பலாக்கி விடும் அந்த நூற்றுக்கணக்கான ஆயிஷாக்களுக்கு இந்தப் புத்தகத்தை சமர்ப்பிக்கிறேன்......

**த.சரவணன்**

## பழமொழியும் அதன் விளக்கமும்


**ஊ**ரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்
தன் பிள்ளை தானே வளரும்.

விளக்கம்:

இதன் அர்த்தம், ஒருவனின் மனைவி கர்ப்பமாக இருக்கும் போது (என்னதான் அவன் மனைவியாக இருந்தாலும் அவள் இன்னொருவன் அதாவது ஊரான் பிள்ளைதானே) அவளை நன்றாக கவனித்துக் கொண்டால், அவளின் வயிற்றில் வளரும் தன் பிள்ளை தானாக வளரும் என்பதாகும்.

**இராஜேஷ்வரி**
**இராமச்சந்திரன்**

# குறுக்கெழுத்து புதிர்



### இடமிருந்து வலம்

1. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று சொன்னவர் (5).

3. நித்திரை - வேறு சொல் (5).

7. முருகனின் வாகனம்; நம் தேசிய பறவை (3).

8. எழுத்தாளர் சுஜாதாவின் இயற்பெயர் என்ன? (6).

14. சமீபத்தில் சாஹித்ய அகாடமி விருது வாங்கிய பெண்மணி - தமிழகத்தில் இருந்து வாங்கிய 4 வது பெண் இவர் (3).

### மேலிருந்து கீழ்

1.உணவு பொருட்கள் தவிர நீ வாங்கும் அனைத்திற்கும் செலுத்த வேண்டும் (2).

2. தொழிலில் வருவது (3).

3. எழுத்தாளர் திரு.பாலகுமாரன் எழுதிய புதினம் - ராஜராஜ சோழன் பற்றியது (4).

5. இது உயிரினும் ஓம்பப்படும் (5).

6. சேக்கிழார் எழுதிய அருந்தமிழ் நூல் (7).

7. எழுத்தாளர் திரு.பாலகுமாரன் எழுதிய புதினம்- மர என வரும் (5).

8. ஊர்கூடி இழுப்பது - வேறு பெயரில் இங்கே (3).

9. எழுத்தாளர் திரு பாலகுமாரனின் கதை தொகுப்பு - கடல் என தொடங்கும் (6).

10. இவரின் காலணி ஒரு நாட்டை ஆண்டது (3).

11. மிதிலையின் மன்னன் (4).

13. தி. ஜா வின் முள் புதினம் (4).

### கீழிருந்து மேல்

4. பாலின் நிறத்தில் இருக்கும் (2).

9. ராஜராஜ சோழனின் குருவான சித்தர் (7).

12. அந்த காலத்தில் மாணவர்கள் படித்த முறை (5).

14. வேங்கையின் மைந்தன், பாவை விளக்கு போன்ற நூல்களின் ஆசிரியர் (4).

**ரம்யா நரசிம்மன்**

# மூளைக்கு வேலை

முதலில் இருப்பது.. கல்.. கடைசியில் இருப்பது..
கலங்கரை விளக்கம்..
இடையில் இருப்பவைகளில்.. ஒன்றாவது நீங்கள்
சொல்ல முடியுமா ???

| க |
| ல் | க |
| வு | க | ன |
| டி | ண் | க | ணா |
| ள | ம் | க | ம் | ப |
| கா | பு | க | ப் | ண் | ணி |
| பா | தா | தி | ர | க | த் | ம் |
| து | வு | ட | ழ் | ள் | க | த் | வா |
| ப | யா | ட | க | ம | ம் | ல் | ண் | ண |
| ல | ரை | க | ங் | க | ள | ம் | வி | க் | க |

# ஆணியே பிடுங்க வேண்டாம்



தமிழ் Memes என்றாலே வடிவேலு தான். நம் வடிவேலுவின் மீம்ஸ் வலம் வராத தமிழர் கைபேசியே உலகத்தில் இருக்காது. நம் கைபேசியில் பார்க்கும் பாதி ஸ்டிக்கர்ஸ் அவரோடதாக தான் இருக்கும். அவரது வசனமும் சரி முக பாவமும் சரி தினப்படி எல்லா நிகழ்வுகளுக்கும் கக்கக்கபோ என கனகச்சிதமாக பொருந்தும். ஆணியே பிடுங்க வேண்டாம், பாடி ஸ்ட்ரோங்கு பேஸ்மெண்டு வீக்கு , என்ன வெச்சு காமெடி கீமெடிய பண்ணலையே என அடுக்கிக்கொண்டே போகலாம். இது போன்ற மீம்ஸ் பல சமயம் இறுக்கமான தருணங்களையும் கலகலப்பாக மாற்றிவிடும்.

இப்படி த்விட்டர், இன்ஸ்டாகிராம் , பேஸ்புக் என இணையதளம் முழுதும் வலம் வரும் மீம்ஸ் என்றால் என்ன? அது எப்பொழுது, எப்படி ஆரம்பித்தது தெரியுமா?.

மீம் என்பது ஒரு கருத்து, நடத்தை அல்லது பாணி ஆகும், இது ஒரு கலாச்சாரத்திற்குள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பிரதிபலிப்பு மூலம் பரவுகிறது மற்றும் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட நிகழ்வு அல்லது கருப்பொருளைக் குறிக்கும் குறியீட்டு



அர்த்தத்தைக் கொண்டுள்ளது. மீம் என்ற சொல் ரிச்சர்ட் டாக்கின்ஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது. இது 1976 ஆம் ஆண்டு அவரது புத்தகமான The Selfish Gene மூலம் பிரபலமானது.

மரபணுவுக்கும் (genes) மீம்ஸ்க்கும் பல ஒற்றுமைகள் உண்டு. நமது மரபணு உயிரியல் ரீதியாக நம் குழந்தைகளுக்கும் பிறகு பேரக் குழந்தைகளுக்கும் கடத்தப்படுவது போல மீம்ஸ்ம் ஒருவர் மூலம் பலருக்கு மனதால் கடத்தப்படுகிறது. எப்படி வலிமையான ஜீன்ஸ் பல தலைமுறை கடந்துச் செல்கிறதோ, வலிமையான மீம்ஸ் பலரை சென்றடையும்.



மரபணு எப்படி உயரம், நிறம், முகபாவம், என உங்கள் உடல் அம்சங்களை தீர்மானிக்கிறதோ, அதை போலவே மீம்ஸூம் உங்கள் மன ஓட்டத்தை தீர்மானிக்கும். எது சரி எது தவறு என மனதின் ஆழ்மனதில் பதியும் மீம்ஸ் நம்மை வழிநடத்தும்.

இனப்பெருக்கம் மூலம் கடத்தப்படும் மரபணு ஏழு தலைமுறைக்கு மட்டும் தான். காரணம் உங்கள் குழந்தைகளுக்கு உங்கள் மரபணு பாதியும், உங்கள் துணைவருடைய மரபணு பாதியும் கடத்தப்படும். பேரக் குழந்தைகளுக்கு உங்கள் மரபணு 25% , கொள்ளு பேரர்களுக்கு 12.5 % ஆக ஏழு தலைமுறைக்கு பின் ஒன்றும் இல்லாமல் போகும்.



மூன்று தலைமுறைக்கு முன் இருந்த தாத்தாக்கள், பாட்டிக்கள், பெயர் கூட நமக்கு சரியாக தெரியாது, ஆனால் மூவாயிரம் வருடத்துக்கு முன்னர் வாழ்ந்த மீம்ஸ் வழி பாட்டன் திருவள்ளுவர் சொன்னதெல்லாம் நம்மை அறியாமலேயே ஏதாவது வாழ்வின் பல கட்டத்தில் நம்மை வழி நடத்திக்கொண்டு இருக்கும். அது தான் மீம்ஸ்க்கு இருக்கும் சக்தி .

இதோ எனக்கு பிடித்த மீம்ஸ்

யாதும் ஊரே யாவரும் கேளிர் - பாட்டன் கணியன் பூங்குன்றனார்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - பாட்டன் திருவள்ளுவர்

முயற்சி திருவினையாக்கும் - பாட்டன் திருவள்ளுவர்

அறம் செய்ய விரும்பு - பாட்டி ஔவையார்

கற்றது கை மண் அளவு - பாட்டி ஔவையார்

திரை கடல் ஓடியும் திரவியம் தேடு - பாட்டி ஔவையார்



அமெரிக்காவில் உயர்க் கல்வி மற்றும் வேலை, பன்னாட்டவர் சுற்றார் என நான் வாழும் இந்த வாழ்க்கைக்கு எப்படியோ எனக்கு பிடித்த இந்த மீம்ஸ் கடுவினை ஆக்கியாக (Catalyst) இருந்திருக்கிறது.

3000 வருடத்திற்கும் முன்னர் எல்லாரும் நம்மவர் தான் என்று கணியன் பாட்டனுக்கு எப்படி சொல்ல தோன்றிற்று? நினைத்தாலே மலைப்பாய் இருக்கிறது - விண்வெளிக்கு போய்வந்த ஒரு நாசா (NASA) பெரியவர் சொன்னார் விண்வெளியில் இருந்து பார்த்த போது இந்த உலகமே ஒரு சின்ன புள்ளியாக தெரிந்ததாம், அதற்கு பிறகு "அட ச்சேய் தம்மா துண்டு உலகமடா" என்று குறுகிப் போனாராம் . அந்த சிறு புள்ளியில் அமெரிக்கன் , ரஷியன் என்றோ கருப்பு - வெள்ளை என்றோ பார்க்கும் பாகுபாடெல்லாம் அவர் கண்களில் இருந்து அன்று முதல் காணாமல் போனதாம்.

ஆனால் நாமோ இன்னமும் ரஷ்யா -உக்கரைன் - நேட்டோ என்று சண்டை போட்டுக்கொண்டு இருக்கிறோம். நாடு என்ற அளவுகூட இல்லை , ஆந்திரா-தெலுங்கானா, தமிழ்நாடு- கன்னடா என்று நதிநீர் பிரச்சனை அதை விட கொடுமை ஒட்டி இருக்கும் இரண்டு ஊருக்குள்ளேயும் குளத்து நீர் பிரச்சனை...

இது போதாதென்று வந்தேறி யார் மண்ணின் மைந்தன் யார் என்று தனியாக DNA ஸ்கேனிங் ( இனக்கீற்று அலகிடு) செய்யும் கூட்டம் வேறு... (அப்படி ஸ்கேனிங் செய்து பார்த்தால் நாம் எல்லோருமே ஆப்ரிக்காவில் இருந்து தான் வந்தோம் என்றே தெரியவரும்).

இவர்களையெல்லாம் இலான் மாஸ்கிடம் சொல்லி விண்வெளிக்கு சுற்றுப் பயணம் கூட்டி செல்லவா முடியும். நம் பாட்டன் கணியன் பூங்குன்றனார் பாடலைத்தான் டியூஷன் எடுக்க முடியும்.



பிறகு நான் மேல் ஜாதி, இவன் கீழ் ஜாதி என்போர், நான் ஆண்ட பரம்பரை, ஆந்தை பரம்பரை என்போர், இவர்கள் எல்லாரையும் வரிசையாக நிற்க வைத்து மட்டார் என நடு மண்டையில் அடித்தாற்போல, பாட்டன் வள்ளுவர் நச் என்று சொன்னார் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று!

இன்றைய பிரச்சனைகளுக்கும் இயல்பாக விடை சொல்லும் இவர்களுடைய மீம்ஸ் என்பதால் தான் 10, 20 வருடம் இல்லை, 100, 200 வருடம் இல்லை , 2000, 3000 வருடம் தாண்டியும் வீரியம் குறையாமல் கடந்து வருகிறது

மரபணு போலவே மீம்ஸும் பரிணாமக் கோட்பாடு (Evolution Theory) சொல்வது போல பிழைத்தெஞ்சி நிற்றல் (survival) ஏதுவாகவும் துணையாகவும் இருக்குமானால் அவையெல்லாம் பல தலைமுறைகள் தாண்டி வீரியமாகக் கடத்தப்பட்டுக் கொண்டே இருக்கும்.



தினப்படி காலை காபி நேரம் முதல் இரவு கண் மூடும் வரை வாட்ஸாப்பில் memes மேலனுப்புதல் (forward) மட்டும் செய்யாமல் இப்படி நீங்களும் அறிய பெரிய கருத்து ஒன்றை சொந்தமாக உருவாக்கி இணையத்தில் வீரியமாக உலவ விட்டால் என்ன ? அதுவும் அதை தஞ்சாவூர் கல்வெட்டில் வெட்டி வைத்தால், பின்னால் வரும் சந்ததியர் பார்த்துப் படித்து தெளிவாக நடந்துக் கொள்வார்கள் அல்லவா? உங்களுக்கும் வள்ளுவர் போல ஔவையார் போல மீம்ஸ் வழி வாரிசுகள் எல்லாம் உருவாகுவார்கள் இல்லையா?



ஹ்ம்ம் .. ஆணியே பிடுங்க வேண்டாம் என்கிறீர்களா ?

**வந்தியத்தேவன்,TX**

# செஞ்சி






# ஆழியின் அர்த்தங்கள்

இப்புவியில் பரந்து விரிந்து இருப்பது சமுத்திரம். இது ஆழி, சமுத்திரம், சாகரம், ஆலம், ஓதவனம், கார்கோள், பாழி என பல பெயர்களில் பரவிக் கிடக்கிறது. கடல் என் வாழ்வில், ஒவ்வொரு நிலையிலும் வெவ்வேறு அர்த்தங்களை உணர்த்துவதாக இருந்து உள்ளது.

பள்ளிப் பருவத்தில், அந்தப் பருவத்துக்கே உரிய, உற்சாகத்துடன் கடல் நீரில் கால் நனைத்து, மணல் வீடு கட்டி, அது நீரில் கலைந்து கடலோடு கலப்பதைப் பார்த்து நிற்பது பெரிய ஆனந்தம். நினைவு தெரிந்துக் கேட்டப் புராணக் கதைகள் மூலம் கடல், பாற்கடல் ஆயிற்று.



அடுத்தப் பருவத்தில், கடலின் மீதான என் பார்வை முற்றிலும் மாறிற்று. ஒவ்வொரு முறைப் பார்க்கும் போதும், பிரமிப்பு கூடிற்று. உதாரணமாக - கடலும் வானும் எந்தப் புள்ளியில், எந்த நேர்க் கோட்டில் இணைகின்றன? மேகங்கள் கடலோடு இணையும் புள்ளியின் நிறம் என்ன? ஆயிரம் ஆயிரம் ஆச்சர்ய வினாக்கள். ஆனாலும், அறிவியலை அப்புறப்படுத்தி கற்பனைக் கூட்டிப் பார்க்கவே என்றும் மனம் ஏங்கும்..



கற்பனை, கவிதை தவிர கடல் கற்றுக் கொடுத்தப் பாடங்கள் ஏராளம் எனக்கு.

கடலும் வானும் இணைந்து இருப்பது போல, இவ்வுலகில் மனிதன்

ஒவ்வொரு உறவுகளோடும் இருத்தல் வேண்டும். அலைகள் அர்த்தங்களின்றி கரை தேடி வருவதில்லை. ஒவ்வொரு அலையும், இன்னும் மேலே மேலே சென்றுக் கரைத் தொட முயலுகிறது. அவை போல் முயற்சி வேண்டும் வாழ்வில்..

ஆனாலும் எவ்வளவு உயரச் சென்றாலும், ஆரவாரமின்றி, தன் பாதை தவறாமல் தன் இருப்பிடம் திரும்புகிறது. மனிதன் எவ்வளவு உயரச் சென்றாலும், தன்னிலைத் தவறாமல், தன் வழியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அடுத்தடுத்து ஒரே ஆழப் புள்ளியில் தொடங்கினாலும், ஒரே கரை நோக்கிப் பயணப்பட்டாலும் அவற்றுள், போட்டியில்லை. பொறாமையில்லை மனிதன் போல். ஒரே குடும்பத்தில் இருந்தாலும், ஒரே வயதில் இருந்தாலும், சமூகத்தில் ஒரே நிலையில் இருந்தாலும் மனிதன் ஒப்பிட்டுப் பார்க்காமல், பொறாமை இன்றி இருக்கக் கடல் போதிக்கும் பாடம் அது.

கடல் மணலில் கால் தடம் பதிக்காதவர் எவருமில்லை.. தன் விரல் கொண்டு வரையாதவர் எவருமில்லை.. தடம் பதித்த நொடிப் பொழுதில், அலை வந்து அழித்துப் போகும்... இதே போல் தான் மனித வாழ்வும்... அங்கே நொடிப் பொழுது.. மனிதனுக்கு வருடங்களில்.. அவ்வளவே... அதே போல் தடயங்களின்றி துறந்திடுவோம் இப்புவியை.



கடலின் அமைதிக் கற்பிக்கும் கல்வி ஆயிரம். அலைகளற்ற கடலை ரசித்ததுண்டா.... கொள்ளை அழகு...அத்தனை

ஆரவாரத்தையும் தன்னுள்ளே கொண்டும், மேற்பரப்பில் அப்படியோர் அமைதி... அந்த மௌனச் சத்தங்கள் நம் செவிகளில் அறைந்து சொல்லுகிறது - எத்தனை மகிழ்ச்சி,
எத்தனை வேகம், எல்லாம் இருந்தும் நிதானமாய், அமைதியாய் இருக்க வேண்டும் என்று.



என்
பாதங்களில் பரவிய
பாழி நீர்,
என் ஸ்பரிச சுகந்ததுடன்
பார் எங்கும்
ஆழியில் பரவி
பெருக்கெடுக்கும் பேரலையாய்!!!

இவையெல்லாம் என் பார்வையில் ஆழி உணர்த்தும் அர்த்தங்கள்... உங்கள் பார்வை ஆழியின் மீது எப்படி இருக்கிறது.?

ஆழியின் அர்த்தங்களை உணர்ந்தவளாய்,

**ரம்யா நரசிம்மன்**

## கடி ஜோக்:

2. காலண்டருக்கு பிடித்த பழம் எது?

[illegible]

# பெண் மேம்பாடு அடைதல்

பெண்மை என்பது ஒற்றைச் சொல்லால் ஆன புரட்சிக் கவிதை. அது வாசிக்க மறந்த அல்லது வாசிக்க மறுத்த மானிட குலத்தின், வஞ்சனை இருட்டை விலக்கி, மேலெழுந்து ஒளிரும் கவிதை.

"விலகி வீட்டிலோர் பொந்தில் வாழ்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்"



என்று, அன்று கனவெழுத்துக்களைக் காகிதத்தில் எழுதி "இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டீரோ..! என உலகத்தோர் செவிகளை நோக்கி உரத்தக் குரல் எழுப்பினான் பாரதி. உன் கனவும், என் கனவும் ஒன்று தான் பாரதி என எழுதுகோல் எடுத்தப் பெண்மை, இன்று மேம்பாடு அடைந்து கொண்டிருக்கிறது.

பெண்ணுக்குள் ஞானம் உண்டு. அது இரும்பு போல் உண்டு. ஆனால் ஆணாதிக்க மனப்பான்மை எனும் அதிகார சூழ்ச்சியால், அது காலப்போக்கில் கை நழுவி வீழ, துருப்பிடித்துப் போனது. துருப்பிடித்த ஞான இரும்பை, சம்மட்டி அடி அடித்து, கல்வித் தீப்பொறி கொண்டு, தூய்மை செய்ததில் இன்று அவளின் ஞான ஒளி கொஞ்சம் கொஞ்சமாக சுடர்விட்டுக் கொண்டிருக்கிறது.

"மனைக்கு விளக்கம் மடவார் "
என நாலடியார் கூறுகிறது. மனைக்கென்ன மானுடமே, மாபெரும் உலகுக்கும் விளக்கம் பெண்மை தான் என மாபெரும் சபைதனில் இன்று அவளின் வெற்றி மகுடங்கள் வீறு நடை போடுகின்றன. இத்தனைக்கும்

அடிப்படை, பெண் கல்விக்கான உரிமைப் போர் வெற்றி பெற்றது தான். அதற்கான ஆயிரமாயிரம் சான்றுகளில் ஒரு சான்றே மலாலா. உலகப் பெண்களின் ஒற்றைக் குரலாய் ஒலித்த மலாலாவிடம் அவர் அம்மா "முகத்தை மறைத்துக்கொள், எல்லாரும் உன்னைப் பார்க்கிறார்கள்" என்றதற்கு "நானும் தான் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றாள்.



ஒரு புத்தகம், ஒரு எழுதுகோல், ஒரு ஆசிரியர், ஒரு மாணவர் இந்த உலகத்தையே மாற்ற முடியும் என நினைத்து, மலாலா கல்வியை நம்பியதால் தான் இது சாத்தியமாயிற்று. பெண்ணின் மேம்பாடு உண்மையான கல்வியால் மட்டுமே சாத்தியம். உண்மையான கல்வி முழு விடுதலையை வாங்கித் தராமல் இருக்காது. அப்படி வாங்கித் தரவில்லை எனில் அது உண்மையான கல்வியாக இருக்காது என்பேன்.

"வலிமை, கோபம், ஆளும்திறன் போன்றவை ஆணுக்கும், சாந்தம்,அமைதி போன்றவை பெண்ணுக்குமான குணங்கள் என்பது ஆண் பெண்ணை அடக்கியாளப் பயன்படுமே தவிர, பெண்ணுக்கு ஒரு நாளும் பயன்படாது" என்றார் பெரியார். இது எவ்வளவு பெரிய நடப்பியல் உண்மை...!

நங்கைக்கு நாணம் தான் அழகு என மூளைச்சலவை செய்த இலக்கிய உலகில், ஞானம் தான் அழகு என பதிய வைக்க நினைத்த பாரதி, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்டப் பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறி, திமிர்ந்த ஞானச்செருக்கு என மடை மாற்றி எழுதினான்.

"பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத்

தருவது மட்டுமல்ல, சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும்" என்கிறார் சார்லட் பன்ச். ஆகவே, சமூக மேம்பாடே பெண்ணிய மேம்பாட்டைச் சார்ந்தது தான் என்பதை இவ்வுலகு உணர வேண்டும்.



உலகப் பெண்ணின மேம்பாடு என்பது அனைத்துப் பாலின மனிதரும் முன்னெடுத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு. இன்றைய சூழலில் சட்டம் பெண்ணின் மாபெரும் கேடயம். கிராமம், நகரம் என வேறுபாடின்றி, எங்கெங்கும் பெண்மை மேம்பாடு அடைவது மிக மிக முக்கியம். பெண்களின் பொறுப்பாக நான் கூற விழைவது, மன உறுதியையும், உடல் உறுதியையும் வளர்த்துக் கொண்டு, கல்வி எனும் தீப்பந்தம் ஏந்திக் கொண்டால், விடுதலை வெளிச்சத்தில் பெண் இனமே மேம்பாடு அடைந்து விடும் என்பது தான்.

**த. இளவரசி**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை.**

## தமிழை அறிவோம்

*Bluetooth* - ஊடலை

*GPS* - தடங்காட்டி

*Scanner* - வருடி

# வார்த்தை விளையாட்டு:

குறைந்தது ஐந்து
தமிழ் வார்த்தைகளை கண்டு
பிடித்து சொல்ல வேண்டும்


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கு | கோ | ர | லா | ட | ப் | ன் | ஓ |
| பி | ர | ப | ப் | சி | வ | உ | மி |
| ர | கா | ங் | கே | ய | ம் | போ | ள |
| ன் | ள | ள் | கா | ல் | லெ | அ | கு |
| தே | ங் | ர் | மா | ட் | ஐ | து | ணி |
| ப் | தி | ழை | ப் | டு | ட | சூ | ல் |
| பு | க் | பே | பா | தே | பே | ம் | ளை |

மேல் கீழ் இடம் வலம் குறுக்கு
எப்படியும்


## கடி ஜோக்:

3. எறும்பை cut பண்ணினா என்ன ஆகும்?

# மாணவர் பகுதி



தத்வி ராஜ்குமார்




தேஜோவிரிஷ் ராஜ்குமார்

## சென்ற இதழுக்கான விடுகதை விடைகள்:

1. தேங்காய்
2. உப்பு
3. சீப்பு
4. தராசு
5. தேங்காய்

## சென்ற பதிப்பில் கேட்கப்பட்ட ஆறு வித்தியாசங்கள்



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு

SOUTH BAY TAMIL KALVI

keetru@sbtsla.org

| | | |
|---|---|---|
| வாணி கோபால்சாமி<br>இணை ஆசிரியர் | சுபா ஹரி<br>ஆசிரியர் | ரம்யா நரசிம்மன்<br>இணை ஆசிரியர் |